தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி
தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்
Tamilische Bildungsvereinigung e.V.

Bessemerstrasse 7/c
70435 Stuttgart

Tel: +49 (0)7118709767
Fax: +49(0)7118709769
info@tbvgermany.com
www.tbvgermany.com
Steuernummer: 99018/55410

Vereinssitz Stuttgart
Reg: VR 6607
Amtsgericht Stuttgart

Bildung, Kultur und Sport

Tamilische Bildungsvereinigung e.V. Bessemerstr 7/c 70435 Stuttgart

ஸ்ருற்காட் 06.10.2021
சுற்றறிக்கை 10 2021
நடுவச் செயலகம்

மதிப்புக்குரிய தமிழாலய நிர்வாகி மற்றும் கலைப்பிரிவுச் செயற்பாட்டாளர் அவர்களுக்கு,

அன்புடையீர்!

கலைத்திறன் போட்டி 2022

யேர்மனியில் தமிழ்க் கல்விக் கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழியங்கும் தமிழாலயங்களிற் பயிலும் மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் 2022ஆம் ஆண்டுக்கான கலைத்திறன் போட்டி தமிழாலயங்களிடையே நடாத்தப்படவுள்ளது.

இக்கலைத்திறன் போட்டி தமிழாலயங்களிற் பயிலும் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கியதாக நடாத்தப்படும். இப்போட்டியில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பங்கேற்புக்கான மதிப்பளிப்பும், முதல் மூன்று நிலைகளை அடையும் போட்டியாளர் / போட்டியாளர்களுக்குப் போட்டி நடைபெறும் அரங்கிலேயே மதிப்பளிப்பு வழங்கப்படும். போட்டிகளிலே பங்குபற்றிப் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் மாநில மட்டத்திலும், யேர்மனி தழுவிய மட்டத்திலும் முதல் மூன்று நிலைகளைப்பெறும் தமிழாலயங்களுக்கு எமது 32ஆவது அகவை நிறைவுவிழா அரங்குகளில் சிறப்பு மதிப்பளிப்பு வழங்கப்படும்.

கலைத்திறன் போட்டிக்கு நாம் தெரிவுசெய்துள்ள ஒன்பது கலைகள்,

1. கோலாட்டம் (குழுநிகழ்வு)
2. ஒயிலாட்டம் (குழுநிகழ்வு)
3. காவடி, கரகம், பொய்க்காற் குதிரை (மூன்றும் இணைந்த குழுநிகழ்வு)
4. பரதநாட்டியம் (நாம் வழங்கும் ஒரு உருப்படிக்குக் குழுவாக ஆடவேண்டும்.)
5. வாய்ப்பாட்டு (தனியொருவர் பாடுதல்)
6. விடுதலை நடனம் - மூன்று பிரிவுகள் (குழுநிகழ்வு)
7. நாடகம் (குழுநிகழ்வு)
8. விடுதலைப் பாடல் (தனியொருவர் பாடுதல்)
9. வில்லுப்பாட்டு (குழுநிகழ்வு)

தமிழாலயங்கள் ஒவ்வொன்றும் மேலே குறிப்பிட்ட ஒன்பது போட்டிகளிலும் பங்குபற்றலாம். ஆனால், ஒரு மாணவர் ஆகக்கூடியது இரு போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றலாம். அத்துடன் ஒவ்வொரு போட்டிக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று ஒழுங்குமுறைகளின் அடிப்படையிலான எண்ணிக்கையில் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

50க்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு ஒருவரையோ அல்லது ஒரு அணியையோ, 100க்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு இருவரையோ அல்லது இரண்டு அணிகளையோ, 100க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு மூவரையோ அல்லது மூன்று அணிகளையோ போட்டிகளிற் பங்கேற்க விண்ணப்பிக்கலாம்.

மேலே தரப்பட்டுள்ள எண்ணிக்கையின் அடிப்படையிற் தமிழாலய மட்டத்தில் அதிகமானவர்கள் பங்கேற்பதற்கு ஆர்வமாக இருந்தால், முதற்கட்டமாகத் தமிழாலய மட்டத்திலான தெரிவுப்போட்டி நடாத்தப்பட்டுப் போட்டியாளரைத் தெரிவுசெய்தல் வேண்டும். அத்தெரிவுப் போட்டியினைத் தனியொருவர் நடுவம் செய்யாது, குழுநிலையிற் துறைசார் வல்லுனர்களினால் நடுவம் செய்யப்பட வேண்டும்.

கீழே குறிப்பிட்ட நாட்களில் உங்கள் மாநிலத்திற்கான கலைத்திறன் போட்டி நடைபெறும். போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 20.12.2021ஆம் நாளுக்கு முன் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களின் அடிப்படையிற் போட்டிகளுக்கான நேரஅட்டவணை தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு (தமிழாலயங்களுக்கு) அனுப்பிவைக்கப்படும். நேரஅட்டவணைக்கு அமைவாகப் போட்டியாளர்கள் போட்டிகளிற் பங்கேற்றுத் தமது வெற்றியை நிலைநாட்ட வேண்டும். ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று நடுவர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் வேற்று மாநிலங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

போட்டிகளுக்கான முக்கிய ஒழுங்கு விதிகள்.

தமிழாலயங்களிற் தமிழ்மொழி பயிலும் மாணவர்களும், தமிழாலய நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நுண்கலை வகுப்பு மாணவர்களும் மற்றும் தமிழாலயங்களிற் தமிழ்மொழி பயிலும் மேயர் பாரதி கலைக்கூட நுண்கலை வகுப்பு மாணவர்களும் கலைத்திறன் போட்டியிற் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். போட்டியிடும் தமிழாலயங்கள் தாம் தனியாகவோ அல்லது அயலிலுள்ள தமிழாலயங்களுடனோ இணைந்து குழுவை உருவாக்கலாம். அப்படி ஒன்றுக்கு மேற்பட்ட தமிழாலயங்கள் ஒருங்கிணைந்து குழுவை உருவாக்கினால், அதில் ஏதாவது ஒரு தமிழாலயத்தின் பெயரிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

கலைத்திறன் போட்டிக்குத் தமிழாலயத்தின் கலைப்பிரிவுச் செயற்பாட்டாளரே ஒருங்கிணைப்புப் பொறுப்பாளராகச் செயலாற்ற வேண்டும். ஆனால், நிகழ்வுகளைப் பயிற்றுவதற்கும், அவை தொடர்பான உதவிகளுக்கும் தமிழாலயங்களின் பெற்றோர், ஆசிரியர் மற்றும் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்துப் பயன்பெறலாம். போட்டிகளுக்குரிய மாணவர்களையும், அவற்றுடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்களையும் அழைத்து வருவதற்கான முழுமையான செயற்பாடுகளை அந்தந்தத் தமிழாலய நிர்வாகியே பொறுப்பேற்பதுடன், இவ்விடயம் சார்பாக உங்கள் தமிழாலயக் கலைப்பிரிவின் செயற்பாட்டாளருக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

போட்டிகளுக்கான வயதெல்லைக் கணிப்பு அட்டவணை

போட்டி	வயதுப்பிரிவு	பிறந்த நாள் முதல்	பிறந்த நாள் வரை
கோலாட்டம் ஒயிலாட்டம்	6 – 14	01.01.2008	31.12.2016
காவடி, கரகம், பொய்க்காற்குதிரை	10 – 18	01.01.2004	31.12.2012
பரதநாட்டியம்	கீழ்ப்பிரிவு 6 – 11	01.01.2011	31.12.2016
	மத்தியபிரிவு 12 – 17	01.01.2005	31.12.2010
	மேற்பிரிவு 18 – 21	01.01.2001	31.12.2004
வாய்ப்பாட்டு	கீழ்ப்பிரிவு 6 – 10	01.01.2012	31.12.2016
	மத்தியபிரிவு 11 – 15	01.01.2007	31.12.2011
	மேற்பிரிவு 16 – 19	01.01.2003	31.12.2006
விடுதலை நடனம்	6 – 18	01.01.2004	31.12.2016
விடுதலைப் பாடல்	கீழ்ப்பிரிவு 6 – 12	01.01.2010	31.12.2016
	மேற்பிரிவு 13 – 18	01.01.2004	31.12.2009

1. கோலாட்டம் (5 - 7 நிமிடங்கள்)

கோலாட்டம் என்பது பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட தடிகளைக் கொண்டு தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டாக ஆடும் ஒரு கிராமிய ஆடற்கலை வடிவமாகும்.

இப்போட்டியில் 6 வயது தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களே பங்குபற்ற வேண்டும். இக் குழுநிகழ்வில் 6 தொடக்கம் 10 மாணவர்கள் இணைக்கப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பாடல்கள் திரையிசை (சினிமா) தவிர்ந்த தமிழ்க் கிராமியப் பாடல்களாக அமைதல் வேண்டும். தாயகப் பாடல்களாயின் விரும்பத்தக்கது.

புள்ளிக் கணிப்பு:

- குழுநிலை ஆடல் வெளிப்பாடு 30 புள்ளிகள்
- நடன ஆக்கம் 30 புள்ளிகள்
- பாடற்தெரிவு 15 புள்ளிகள்
- ஒப்பனை 15 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

2. ஒயிலாட்டம் (5 - 7 நிமிடங்கள்)

ஒரே நிறத்துணியைத் தலையிற் கட்டிக்கொண்டு, கையிலே ஒரே நிறத்துணியொன்றை வைத்து இசைக்கேற்றவாறு ஆடும் ஆண்களுக்கான ஒரு குழுநிலை ஆடல் நிகழ்வாகும்.
இப்போட்டியில் 6 வயது தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களே பங்குபற்ற வேண்டும். இக்குழுவில் 6 தொடக்கம் 10 மாணவர்கள் இணைக்கப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பாடல்கள் திரையிசை (சினிமா) தவிர்ந்த தமிழ்க் கிராமியப் பாடல்களாக அமைதல் வேண்டும். தாயகப் பாடல்களாயின் விரும்பத்தக்கது.

புள்ளிக் கணிப்பு:

- குழுநிலை ஆடல் வெளிப்பாடு 30 புள்ளிகள்
- நடன ஆக்கம் 30 புள்ளிகள்
- பாடற்தெரிவு 15 புள்ளிகள்
- ஒப்பனை 15 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

3. காவடி, கரகம், பொய்க்காற் குதிரை (5 - 7 நிமிடங்கள்)

செம்பு அல்லது பித்தளைக் குடத்தைத் தலையில் வைத்தபடி சமநிலைபேணி ஆடப்படும் ஆட்டம் கரகாட்டம். கழக இலக்கியங்களில் இதனைக் குடக்கூத்து எனவும் சுட்டப்பட்டுள்ளது. காவடியாட்டமானது காவடியைப் பயன்படுத்தி ஆடப்படவேண்டும். குதிரைக்கூட்டை அணிந்து கொண்டு குதிரையைப்போன்ற தோற்ற வெளிப்பாட்டை பிரதிபலித்தவாறு மரக்காலில் நின்று ஆடும் ஆட்டம் பொய்க்காற் குதிரை ஆட்டம். இந்நிகழ்வில் 10 தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்டோர் பங்கேற்கலாம். இக்குழு நிகழ்வில் 12 மாணவர்கள் இணைக்கப்படுதல் வேண்டும். அதில் அரைப்பங்கு ஆண்களும், பெண்களும் இடம்பெறுதல் கட்டாயமாகும். தெரிவு செய்யப்படும் பாடல்கள் திரையிசை (சினிமா) தவிர்ந்த தமிழ்க் கிராமியப் பாடல்களாக அமைதல் வேண்டும். தாயகப் பாடல்களாயின் விரும்பத்தக்கது.

புள்ளிக் கணிப்பு:

- குழுநிலை ஆடல் வெளிப்பாடு 30 புள்ளிகள்
- கிராமிய வடிவ நடன ஆக்கம் 30 புள்ளிகள்
- பின்னணி ஒத்திசைவு 20 புள்ளிகள்

- ஒப்பனை 10 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

4. பரதநாட்டியம்:

இப்போட்டியில் 6 முதல் 10 பேர்வரை கொண்ட குழுவாகப் பங்குபற்றலாம். இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளது. 6 - 11 வயதுக்குட்பட்டோர் கீழ்ப்பிரிவாகவும் 12 - 17 வயதுக்குட்பட்டோர் மத்தியபிரிவாகவும் 18 - 21 வயதுக்குட்பட்டோர் மேற்பிரிவாகவும் கணித்துப் போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளுக்கான உருப்படிகள்:

கீழ்ப்பிரிவுக்கு ஸ்வரஜதி (5 - 6 நிமிடங்கள்), மத்தியபிரிவுக்குக் கீர்த்தனம் நவரசங்களில் ஒன்றைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் (7 - 8 நிமிடங்கள்), மேற்பிரிவுக்குத் திருப்புகழ், முருகனின் திருவிளையாடல்களை வெளிப்படுத்தும் தன்மையுடையதாக இருக்கவேண்டும். (8 - 10 நிமிடங்கள்) என்ற நேரஅளவுகளின் அடிப்படையிற் போட்டிகள் நடாத்தப்படும்.

புள்ளிக் கணிப்பு:

- தாளம், லயம் 20 புள்ளிகள்
- பாவம் 20 புள்ளிகள்
- அங்கசுத்தம் 20 புள்ளிகள்
- பின்னணி ஒத்திசைவு 20 புள்ளிகள
- ஆற்றுகை வெளிப்பாடு 20 புள்ளிகள்

5. வாய்ப்பாட்டு

இப்போட்டி மூன்று பிரிவுகளாகப் பிரித்து நடாத்தப்படும். 6 - 10 வயதுப் பிரிவினர் கீழ்ப்பிரிவாகவும், 11 - 15 வயதுப் பிரிவினர் மத்தியபிரிவாகவும் 16 - 19 வயதுப் பிரிவினர் மேற்பிரிவாகவும் கணித்துப் போட்டிகள் நடைபெறும்.

கீழ்ப்பிரிவுப் போட்டியாளர்கள் நாட்டார்பாடலைத் தெரிவுசெய்து பாடவேண்டும்.(4 - 6 நிமிடங்கள்)

மத்தியபிரிவுப் போட்டியாளர்கள் சிட்டைஸ்வரத்துடன் அமைந்த தமிழ்க் கீர்த்தனையைத் தெரிவுசெய்து பாடவேண்டும் (7 - 10 நிமிடங்கள்),

மேற்பிரிவுப் போட்டியாளர்கள் இராகம், நிரவல், கற்பனாஸ்வரத்துடன் தமிழ் மத்திமகாலக்கிருதி அல்லது தமிழ் சௌக்ககாலக்கிருதியில் ஏதாவதொன்றைத் தெரிவுசெய்து பாடவேண்டும். (10 - 14 நிமிடங்கள்)

வயதுப் பிரிவுகளுக்கேற்ப விடயங்களை ஆசிரியரே தெரிவுசெய்து போட்டிக்குப் பயிற்சி வழங்க வேண்டும். இப்போட்டிகளுக்குச் சுருதிக்கருவி மாத்திரமே பயன்படுத்தமுடியும்.

புள்ளிக் கணிப்பு:

- சுருதி 20 புள்ளிகள்
- லயம் 20 புள்ளிகள்
- உச்சரிப்பு 10 புள்ளிகள்
- மனனம் 20 புள்ளிகள்
- ராகம் ஒத்திசைவு 10 புள்ளிகள்

- குரல்வளம் 10 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

6. விடுதலை நடனம் - நுண்கலை பயிலாத மாணவர்களுக்கானது. ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே நடாத்தப்படும். (5 - 7 நிமிடங்கள்)

இந்தப் போட்டிக்குத் தமிழீழ விடுதலைப் பாடல்களை மட்டுமே தெரிவுசெய்தல் வேண்டும். பாடலை நீங்களே தெரிவுசெய்யலாம். இப்போட்டிக்கு 6 மாணவர்கள் தொடக்கம் 10 மாணவர்கள் இணைக்கப்படுதல் வேண்டும். 6 தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பங்கேற்கலாம். மேற்குறித்த போட்டியானது ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாருக்கும் தனித்தனிப் போட்டியாக நடாத்தப்படும்.

நுண்கலை பயிலாத மாணவர்கள் மட்டுமே இணைக்கப்பட வேண்டும். இதனைத் தமிழாலய நிர்வாகங்கள் கவனத்தில் எடுப்பதோடு, விதிமீறலில் ஈடுபடும் போட்டிகள் நிராகரிக்கப்படும் என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

புள்ளிக் கணிப்பு:

- பாடற் தெரிவு 10 புள்ளிகள்
- பாவம் 20 புள்ளிகள்
- லயம் 20 புள்ளிகள்
- புதுமை வெளிப்பாடு 20 புள்ளிகள்
- கற்பனைத்திறன் 20 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

7. விடுதலை நடனம் - நுண்கலை பயிலும் மாணவர்களுக்கானது (5 - 7 நிமிடங்கள்)

இந்தப் போட்டிக்குத் தமிழீழ விடுதலைப் பாடல்களை மட்டுமே தெரிவுசெய்தல் வேண்டும். பாடலை நீங்களே தெரிவுசெய்யலாம். இப்போட்டியில் 6 மாணவர்கள் தொடக்கம் 10 மாணவர்கள் இணைக்கப்படுதல் வேண்டும். 6 தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பங்கேற்கலாம்.

புள்ளிக் கணிப்பு:

- பாடற் தெரிவு 10 புள்ளிகள்
- பாவம் 20 புள்ளிகள்
- லயம் 20 புள்ளிகள்
- புதுமை வெளிப்பாடு 20 புள்ளிகள்
- கற்பனைத்திறன் 20 புள்ளிகள்
- ஆற்றுகை வெளிப்பாடு 10 புள்ளிகள்

8. நாடகம் (15 - 20 நிமிடங்கள்)

நாட்டு மக்களின் அகத்தினைப் பிரதிபலிக்கும் தமிழர் கலைவடிவங்களிற் தனித்துவமானதும், குமுகாயக் கண்ணாடி போன்றதுமானதொரு கலைவடிவமே நாடகமாகும். நாடகங்கள் நாடக வரைபுகளுக்கேற்ப அமைதல் வேண்டும். கலைஞர்கள் நேரடியாகப் பேசி நடித்தல் வேண்டும். காட்சிப்படுத்தல்களுக்குத் திரையிசைப் பாடல்கள் அனுமதிக்கப்படமாட்டாது. மின்திரையில் காட்சிப்படுத்தவோ, நாடகத்திற்கு ஒவ்வாத காட்சிப்படுத்தல்களையோ தவிர்த்தல் வேண்டும். இப் போட்டிக்கு வயதெல்லை இல்லை.

நாடகத்திற்கான தலைப்பு : சங்கிலிய மன்னன் (வரலாற்று நாடகம்)

புள்ளிக் கணிப்பு:

• கதைக் கரு	15 புள்ளிகள்
• நாடக வடிவமைப்பும், பாத்திர வெளிப்பாடும்	20 புள்ளிகள்
• இயல்பான நடிப்பு	20 புள்ளிகள்
• குரல்வளமும் ஒத்திசைவும்	15 புள்ளிகள்
• அரங்கப் பயன்பாடு	10 புள்ளிகள்
• கையாளப்படும் புதிய உத்தி	10 புள்ளிகள்
• நேரம்	10 புள்ளிகள்

9. விடுதலைப் பாடல் (5 - 7 நிமிடங்கள்)

விடுதலைப் பாடல்களில் ஒன்றைத் தெரிவுசெய்து பாடவேண்டும். இந்தப் போட்டி 6 - 12 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவாகவும் 13 - 18 வயதிற்குட்பட்டோர் மேற்பிரிவாகவும் கணித்துப் போட்டிகள் நடாத்தப்படும்.

புள்ளிக் கணிப்பு:

• சுருதி	20 புள்ளிகள்
• லயம்	20 புள்ளிகள்
• உச்சரிப்பு	10 புள்ளிகள்
• மனனம்	20 புள்ளிகள்
• ராகம் ஒத்திசைவு	10 புள்ளிகள்
• குரல்வளம்	10 புள்ளிகள்
• ஆற்றுகை வெளிப்பாடு	10 புள்ளிகள்

10. வில்லுப்பாட்டு (20 நிமிடங்கள்)

தமிழர் கலைவடிவங்களில் ஒன்றான வில்லுப்பாட்டு அல்லது வில்லிசை, இது வில்லின் துணைகொண்டு இசைக்கப்படுவதாகும். துணைக் கருவிகளாக உடுக்கை, குடம், தாளம் என்பன பயன்படுத்தப்பட வேண்டும். கைவிடப்பட்டுக் கவனிப்பாரற்ற நிலைக்குச் சென்றுவிட்ட எமது பாரம்பரியக் கலைவடிவங்களில் ஒன்றாக இருக்கும் வில்லுப்பாட்டுத் தமிழாலய மாணவர்களால் அரங்காற்றுகை செய்வது பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே, எமது நோக்கத்தைப் புரிந்துகொண்டு தமிழாலயங்கள் முழுமையான ஒத்திசைவோடு போட்டிகளிற் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வில்லுப்பாட்டுக்கான தலைப்பு: **எரியூட்டப்பட்ட எங்கள் நூலகமே!**

புள்ளிக் கணிப்பு:

• கதைக்கரு	20 புள்ளிகள்
• ஒத்திசைவான ஓசையுடன் பாடும் திறன்	20 புள்ளிகள்
• கதைசொல்லும் திறன்	20 புள்ளிகள்
• குரல்வளமும் ஒத்திசைவும்	20 புள்ளிகள்
• அரங்காற்றுகை	10 புள்ளிகள்
• கூட்டிணைந்த குழுச் செயற்பாட்டிசைவு	10 புள்ளிகள்

விடுதலைப் பாடல்களைச் சுருக்கியோ அல்லது இணைத்து விரிவாக்கம் செய்தோ போட்டிகளுக்குப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும். மேற்குறித்த விடயங்களைக் கடைப்பிடிக்காத போட்டிகள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

போட்டிகள் நிறைவுபெற்ற பின்னர் அரங்கிலே மதிப்பளிப்பினைப் பெறும் அனைத்துப் போட்டியாளர்களும், போட்டிக்காக அணிந்திருக்கும் உடை அல்லது சீருடையுடன் மட்டுமே மதிப்பளிப்பினைப் பெற அரங்கிற்கு வரவேண்டும்.

கலைத்திறன் போட்டியினால் எமக்கு ஏற்படவுள்ள செலவுகளின் ஒரு பகுதியை நிவர்த்தி செய்வதற்காகப் பங்கேற்புக் கட்டணம் வழமைபோன்று பெறப்படும். அதன் விபரத்தைக் கீழே நிரற்படுத்தியுள்ளோம்.

• கோலாட்டம்	20,00 €
• ஒயிலாட்டம்	20,00 €
• காவடி, கரகம், பொய்க்காற்குதிரை	20,00 €
• பரதநாட்டியம்	20,00 €
• வாய்ப்பாட்டு	10,00 €
• விடுதலை நடனம்	20,00 €
• நாடகம்	20,00 €
• விடுதலைப் பாடல்	10,00 €
• வில்லுப்பாட்டு	20,00 €

கலைத்திறன் போட்டி நடைபெறும் நாட்கள்:

- 05.02.2022 மத்திய மாநிலம்
- 06.02.2022 வடமத்திய மாநிலம்
- 12.02.2022 தென் மாநிலம்
- 13.02.2022 தென்மேற்கு மாநிலம்
- 26.02.2022 வட மாநிலம்

போட்டியில் பங்கேற்கும் தமிழாலயங்களுக்கான விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் பங்கேற்க விரும்பும் போட்டிக்கு நேரேயுள்ள பெட்டியினுள் புள்ளடியிட்டு விண்ணப்பத்தை முழுமையாக நிரப்பி 20.12.2021ஆம் நாளுக்கு முன்னர் செயலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். மேற்குறித்த நாளிற்குப் பின்னர்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இச்சுற்றிக்கையில் நாம் குறிப்பிட்டுள்ள போட்டிகளுக்கான அனைத்து ஒழுங்குவிதிமுறைகளையும் போட்டியிற் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். யாரேனும் அவற்றை மீறுவது உறுதிசெய்யப்பட்டால் குறித்த நிகழ்வு போட்டியிலிருந்து முழுமையாக நிராகரிக்கப்படும்.

அன்பான நிர்வாகிகளே!

இச்சுற்றறிக்கை கிடைத்தவுடன் இதன் ஒரு பிரதியை முதலில் உங்கள் தமிழாலயத்தின் கலைப்பிரிவின் செயற்பாட்டாளருக்கும், நகரச் செயற்பாட்டாளருக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்குவதுடன் எமது நோக்கம் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடுங்கள். அதன் அடுத்த கட்டமாகக் காலத்தையும் நேரத்தையும் கருத்திலேற்று எம்மோடு தோளோடுதோள் கொடுத்துநின்று செயற்படுகின்ற நிர்வாகிகள் என்றவகையிலே, இன்றைய சூழலையும் காலத்தையும்

கவனத்திற்கொண்டு இச்சுற்றறிக்கையின் 9 பக்கங்களையும் பிரதிசெய்து, உங்களின் பெற்றோர்கள் அனைவருக்கும் வழங்கி, அவர்களின் ஒத்துழைப்பையும் முழுமையாகப் பெற்று உறுதியோடு செயலாற்றுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு : கலைத்திறன் போட்டி 2022 நிகழ்வுகளுக்குத் தேவையான பாடல்களோ, ஒப்பனைப் பொருட்களோ, கலைப்பொருட்களோ தமிழ்க் கல்விக் கழகத்தினால் தந்துதவமுடியாது. ஆகவே அவற்றைக் கருத்திற்கொண்டு நீங்களே தயார் செய்துகொள்ளவும். போட்டி நிகழ்வுகளில் இடம்பெறும் விடுதலைப் பாடலுக்கான நடனங்கள் தேவையேற்படின், தமிழ்க் கல்விக் கழகத்தின் 32ஆவது அகவை நிறைவு விழாவிற்குத் தெரிவுசெய்யப்படும்.

மாநிலக் கலைத்திறன் போட்டியை ஒருங்கிணைத்து நடாத்தும் பொறுப்பை, உங்கள் மாநிலத்திற்கான கலைப்பிரிவின் மாநிலக் கலைத்திறன் செயற்பாட்டாளரிடம் ஒப்படைத்துள்ளோம். அவரின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலைப்பிரிவின் மாநிலக் கலைத்திறன் செயற்பாட்டாளர்களின் நிரல்.

முழுப்பெயர்	மாநிலம்	தொடர்பு எண்
திருமதி கருணைறாஜி பிரபாகரன்	வட மாநிலம் - பீலபெல்ட்	0163 34 55 462
திருமதி சாரதா இராஜ்குமார்	வடமத்திய மாநிலம் - முன்ஸ்ரர்	0176 43 15 40 25
திருமதி சுபாசினி சடகோபன்	மத்திய மாநிலம் - முன்சன்கிளாட்பாக்	0157 38 18 82 00
திருமதி பகீரதி ஆனந்தசிங்கம்	தென் மாநிலம் - முன்சன்	0176 47 17 88 11
திருமதி மோகனாதேவி நகுலேஸ்வரன்	தென்மேற்கு மாநிலம் - லண்டவ்	0176 24 83 04 34

நன்றி.

செ.லோகானந்தம் (லோகன்)
பொறுப்பாளர்
6/10/2021

மா.பாஸ்கரமூர்த்தி
கலைப்பிரிவுப் பொறுப்பாளர்